# கடலும் காவிரியும்



## சிறுவர் பாடல்கள்

ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலும் காவிரியும்

## சிறுவர் பாடல்கள்

ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : கடலும் காவிரியும்

விடயம் : சிறுவர் இலக்கியம்

ஆசிரியர் : ச. அருளானந்தம்

உரிமை : ஆசிரியருக்கு

அட்டைப் படம் : ச. அ. அருள்பாஸ்கரன்

வெளியீடு : அருள் வெளியீடு
37/7, மத்திய வீதி,
உவர்மலை, திருகோணமலை.

முதற்பதிப்பு : 01-01-1998
இரண்டாம் பதிப்பு : 06 - 10 - 98

பதிப்பகம் : வீ ஆர்ஜீ கே
கொழும்பு - 13.
தொ.இ : 347903
பக்ஸ் : 074 - 612934

பக்கம் : 24

விலை : 40 [redacted] ரூபா

**படையல்**

*சிந்தனையை வளர்க்கத் துடிக்கும்*
*சிறுவர்களுக்கு இந்நூல் காணிக்கை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

திரு.ச.அருளானந்தம் அவர்களின் 'கடலும் காவிரியும்' எனும் இச் சிறுவர் பாடல்கள் அடங்கிய நூல் மிக அருமையாக அமைந்துள்ளது. சிறுவர்களுக்கு ஏற்றவாறு இலகுவான சொற்களைப் பதமாக்கி, இதமாக இணைத்து உணர்வோடு பாடக்கூடியதாகப் பாடல்களை யாத்துத் தந்துள்ளார்.

சிறுவர்களுக்காகப் பல கவிதை, கதைத் தொகுதிகளை வெளியிட்டு வரும் இவர் சிறுவர்களுக்காகவே எழுதத் துடிக்கும் ஒரு கவிஞர். இவர் இதயம் எந்நேரமும் பாடுதலையே இன்பமெனக் கொள்கிறது. கதைகள் சொல்லக் கேட்பது, கவிதைகளைப் பாடக் கேட்டுப் பாடுவது சிறுவர்களுக்கு மிக விருப்பமானதாகும்.

'நாட்டு மக்கள் பிணியும் வறுமையும்
நையப் பாடென்றொரு தெய்வம் கூறுமே
கூட்டி மானுடச் சாதியை யொன்றெனக்
கொண்டு வைய முழுதும் பயனுறப்
பாட்டிலே யறங் காட்டெனு மோர் தெய்வம்
பண்ணில் இன்பமும் கற்பனை விந்தையும்
ஊட்டி யெங்கும் உவகை பெருகிட
ஓங்குமின் கவி யாதேனும் வேறொன்றே
..........................................................................
பாட்டிலே தனி இன்பத்தை நாட்டவும்
பண்ணிலே களி கூட்டவும் வேண்டி' என்ற இவ் அடிகள் மகாகவி பாரதி பராசக்தியை கேட்ட வரங்கள். இவை கவிதைகளின் இயல்புகளும் உட்கருக்களும் எவ்வாறு அமையவேண்டும் எனத் தொட்டுக் காட்டுகின்றன. கவிஞர் அருளானந்தம் சிறுவர் அறிவியற்தேவைகளை உணர்ந்து பாரதியின் வரத்திற்கேற்ப பல பாட்டுக்களை இந்நூலில் தந்துள்ளார்.

கடல், அலை, கரை, மீன், காற்று, படகு ஆகியவற்றைப் பாத்திரங்களாக வைத்து, பல உண்மைகளையும், தன்மைகளையும் சின்னஞ் சிறார்களுக்கு இலகுவாக விளங்க வைக்கிறார்.

- " வீசும் காற்றினால் - அலை
விரைந்து எழும்புது "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"படகை மரத்தில் வெட்டினான்
பாய் விரித்துக் கட்டினான்"
'கடலின் மீனைப் பிடித்திட
கரை வலையும் தேடினான்'
கிள்ளி விட்ட பிள்ளைபோல்
துள்ளிக் கடலும் குதித்து.

இவை போன்றன சிந்தனையைத் தூண்ட வல்லன. அத்துடன் பாடல்களைப் படிக்கும் போது கூடவே உணர்வுகளும் அள்ளுண்டு போகின்றன. குறிப்பாக அலைகள்,

'கரையைத் தடவுது'
பாதம் சீண்டிப் போகுது'
'ஓடி அழித்துப் போகுது'
'இடறி விட்டுப் போகுது'
'இரைந்து வருகுது'
'ஆட்டி அசைத்துப் போகுது'

என்ற நிகழ்வுகளைப் பண்ணில் கூறி கற்பனையைத் தூண்டி விருப்பு, வெறுப்பு களிப்பு, கவலை போன்ற உணர்வுகளை ஆங்காங்கே தட்டிவிடுகிறார்.

கடலின் வளம், ஆக்கம், அழிவு, பயன் போன்றவற்றைச் சிறுவர்களுக்கு ஏற்றவாறு சுட்டிக்காட்டுகிறார்.

பொருத்தமான, செறிவுள்ள இலகுவான சொற்களைத் தேர்ந்தெடுத்து விரும்பியவாறு இசையமைத்துப் பாடக்கூடிய வகையில் பாடல்களைப் புனைந்திருக்கிறார். சிறுவர்களுக்குரிய நூலானாலும் பெரியவர்களும் படித்து இன்புறும் வண்ணம் கவித்துவமும் கருத்துக்களும் நிறைந்துள்ளன. சிறுவர்களுக்கேற்ற இச் செந்தமிழ் நூலை நம் பள்ளிப்பிள்ளைகள் கற்றுப் பயன் பெற ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும்.

சிறுவர்களுக்கான பல நூல்களை எழுதித்தர வேண்டும் என திரு. ச. அருளானந்தம் அவர்களை வாழ்த்துவதோடு அருமையான, உயிர்த்துடிப்புள்ள ஓவியங்களை வரைந்து இந்நூலை மெருகுபடுத்தும் திரு.ச.அ.அருள்பாஸ்கரன் அவர்களையும் வாழ்த்துகிறேன்.

**க. கந்தசாமி**
மாகாண கல்விப்பணிப்பாளர்
வடக்கு கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம்
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

சின்ன விழிகள் மின்ன, சிறுகை நீட்டி, புன்னகைத்துப் புது உலகைப் புதிரோடு பார்த்து இரசிக்கும் சிட்டுக்கள் நமது சிறார்கள். உலகினைப் புரிவதற்காக அவர்கள் கேட்கும் கேள்விகள் ஆயிரம்.

அக்கேள்விகளுக்கு விடை சொல்ல, அந்த விடைகளில் இருந்தே மீண்டும் கேள்விகளைக் கேட்டுக் கேட்டு அறிந்து கொள்ளும் ஆவலில் உள்ளவர்கள். அவர்களது அறிவுப் பசிக்கு நாமேதான் தடையாகவு ள்ளோம். அவர்களை அலட்சியம் செய்து நமது கடமைகளில் மூழ்கிவிடு கிறோம்.

சின்னஞ் சிறார்களின் வழிகாட்டிகளாகப் பெற்றோரும், மற்றோரும், ஆசிரியர்களும் விளங்க வேண்டும். அவர்களது சிந்தனை, செயல்கள் விரியும் வண்ணம் ஊக்கமளிக்க வேண்டும். பாடல்கள், கதைகள், நாடகங்கள் என வெளிவரும் நூல்களை அவர்களுக்கு அறிமுகம் செய்து படிக்கத் தூண்ட வேண்டும். சிறார்களின் அறியும் ஆற்றலையும், இரசனையையும் ஒருங்கிணையச் செய்தல் வேண்டும். இசையோடு பாடி அசைய வைக்க வேண்டும். "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரோ" என்பதனை ஆசிரியர்கள் நன்குணர வேண்டும். இப்பாடல்கள் யாவும் இளஞ்சிறார்களின் சிந்தனையைத் தூண்டு வதற்காகவே எழுதப்பட்டவையாகும்.

சிறார்கள் படித்துப் பயன்பெற வேண்டும் என்பதற்காக, அவர்களுக்காகவே வெளிவரும் எனது நூல்களுக்குப் பெருவரவேற் பளித்து ஊக்கமூட்டும் ஆர்வலர்கள் பலர். அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விப்பணிப்பாளர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

இந்நூலைப் படித்துப் பளனுள்ள அணிந்துரையை நல்கிய மாகாண கல்விப் பணிப்பாளர் திரு. க.கந்தசாமி அவர்களுக்கு 'சிறுவர் இலக்கியம் வளரவேண்டும். அதற்கு எழுத்தாளர்களை ஊக்குவிக்க வேண்டும்' என உந்து சக்தியாக இருந்து ஊக்குவிக்கும் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திரு.சுந்தரம் டிவகலாலா அவர்களும் என்றென்றும் நன்றிக்குரியவர்கள். என்னைப் பற்றி பின்னடையில் அறிமுகம் செய்யும் குச்சவெளி பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு.எஸ்.கனகசபை அவர்களுக்கும் நன்றி.

என்ன வேலைகள் இருப்பினும், மனங்கோணாது எனது ஆக்கங் களை தட்டச்சில் வடிவமைத்துத் தரும் செல்வி சித்திரா ஜெகதீசன், திருமதி நிர்மலா ஜெகதேவன் ஆகியோர் என்றும் நன்றிக்குரியவர்கள். கருத்துக்களுக்கு ஏற்ற உருவங்களை வரைந்து, நூலாக்க முயற்சி களைச் செய்து தரும் எனது மகன் திரு.ச.அ.அருள்பாஸ்கரன் அழகாக அச்சிட்டுத் தந்த வீஆர்ஜீகே பதிப்பகத்தார் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

**ச. அருளானந்தம்.**
ஆலங்கேணி,
கிண்ணியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே..................


01. கடலும் அலையும்

02. கடலும் காட்சியும்

03. கடலும் மனிதனும்

04. கடலும் மழையும்

05. கடலும் தம்பியும்

06. கடலும் தூண்டிலும்

07. கடலும் வலையும்

08. கடலும் பருந்தும்

09. கடலும் உயிரும்

10. கடலும் தொழிலும்

11. கடலும் நீரும்

12. கடலும் கரையும்

13. கடலும் உப்பும்

14. கடலும் காற்றும்

15. கடலும் தரையும்

16. கடலும் செயலும்

17. கடலும் சிறுவரும்

18. கடலும் காவிரியும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலும் அலையும்

கடலைப் பாரடா - தம்பி
அலை அடிக்குது
படகு போவதை - மீன்
பார்த்துத் துள்ளுது

வீசும் காற்றினால் - அலை
விரைந்து எழும்புது
மூசிக் கரையிலே - வந்து
மோதி உடையுது

ஓசை பரவுது - காதில்
ஊதிக் காட்டுது
ஆசை தீரவே - கால்
அலையில் நனையுது

நண்டு ஓடுது - அலை
வளைத்துத் துரத்துது
கிண்டி மணலிலே - வீடு
கட்டி நுழையுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலும் காட்சியும்

நீலக் கடல் நெளியுது
நீண்டு கரை குளிக்குது
கோலம் போட்ட மேடைபோல்
கொள்ளை அழகு காட்டுது

கரையில் சனங்கள் குவியுது
கண்டு மனம் துள்ளுது
நுரையை அலைகள் தள்ளுது
நீரை நிலமும் உறிஞ்சுது

ஈர மணலில் வீடுகள்
இருந்து பிள்ளை கட்டுது
ஓரம் பதுங்கி அலைகளும்
ஓடி அழித்துப் போகுது

கோபம் கொண்ட பிள்ளைகள்
கடலுள் மணலை வீசுறார்
பாவம் என்று அலைகளும்
பாதம் சீண்டிப் போகுது.

ச.அருளானந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலும் மனிதனும்

அலை எறியும் கடலிலே
அடையல் ஆடி மிதக்குது
கலை உணர்ந்த மனிதனும்
கடலைத் தாண்ட முனைந்தனன்

படகை மரத்தில் வெட்டினான்
பாய் விரித்துக் கட்டினான்
கடல் பயணம் செய்யவே
காற்றைத் துணைக்கு நாடினான்

கரை தெரியாக் கடலிலே
கடின பயணம் தொடங்கினான்
திரை கடலைத் தாண்டியே
செல்வம் தேட ஓடினான்

கடலில் மீனைப் பிடித்திட
கரை வலையும் தேடினான்
கடல் உணவுக் களஞ்சியம்
கண்டு வியந்து ஆடினான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலும் மழையும்

பரந்து கடல் கிடக்குது
பகலில் வெப்பம் பெறுகுது
விரைந்து ஆவி எழும்புது
விரிந்து வானில் பரவுது

ஆவி சேர்ந்து முகிலதாய்
ஆடி அசைந்து திரியுது
கூவி வீசும் காற்றினால்
கூடிக் குளிர்ந்து கொள்ளுது

கருமை முகிற் கூட்டங்கள்
கனிந்து துளியாய் மாறுது
சொரிந்து மழையும் பெய்யுது
சுகம் நிலத்தை தழுவுது

கடல் பரப்பும் கதிரவன்
கதிரின் செயலும் இல்லையேல்
குடிக்க நீரும் இல்லையே
குடியும் வாழ்வும் இல்லையே.

*ச.அருளானந்தம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலும் தம்பியும்

தம்பி நடந்து வருகிறான்
தாவி அலையைத் தொடுகிறான்
கும்பி எழுந்த அலைகளும்
குளிரைத் தடவிப் போகுது

கரையில் மணலைக் குவிக்கிறான்
காலை வைத்து மூடுறான்
இரைந்து அலையும் வருகுது
இடறி விட்டுப் போகுது

காலை மெல்ல எடுக்கிறான்
கட்டி வீட்டை முடிக்கிறான்
வாலை ஆட்டி நாயுமே
வந்து காவல் நிற்குது

அலை எழுந்து வருகுது
அடித்துக் கரையில் பரவுது
குலைந்து வீடு போகுது
குரைத்து நாயும் குதிக்குது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலும் தூண்டிலும்

அண்ணன் தூண்டில் எடுக்கிறான்
அதிலே இரையைத் தொடுக்கிறான்
கண்ணன் துணைக்கு நிற்கிறான்
கடலில் இறங்கி நடக்கிறான்.

இடுப்பை மறைக்கும் நீரினுள்
இருந்து கயிற்றை வீசுறான்
எடுக்கும் இரையை மீனுமே
என்று பார்த்துச் சுண்டுறான்

அலைகள் அசைந்து வருகுது
ஆட்டி அசைத்துப் போகுது
அலைகள் ஆட்டும் போதிலே
அண்ணன் இசைந்து கொடுக்கிறான்

தூண்டில் கையை அசைத்ததும்
சுண்டி வெட்டி இழுக்கிறான்
தூண்டின் முனையில் மீனொன்று
தூக்கி எடுத்துக் கொள்கிறான்.

*ச.அருளானந்தம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலும் வலையும்

கடற் கரையின் மணலிலே
கட்டுத் தோணி இருந்தது
உடல் வலிமைப் படவர்கள்
உறுதி கொண்டு வந்தனர்

கரையில் இருந்த தோணியுள்
கயிற்று வலையை ஏற்றினர்
விரைந்து கடலில் தோணியை
விட்டு ஏறிக் கொண்டனர்

துடுப்பு எடுத்து வலித்தனர்
தோணி கடலில் செல்கையில்
எடுத்து வலையைப் போட்டனர்
இழுத்து விரித்து விட்டனர்

தோணி கரையில் சேர்ந்ததும்
சூழ்ந்து வலையை இழுத்தனர்
மீனும் வலையுள் திரண்டது
மகிழ்ந்து அள்ளிக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலும் பருந்தும்

கடல் இரைந்து கொண்டது
கரையில் அலையும் உடைந்தது
படகில் மனிதர் இருந்தனர்
பார்த்து மீனைப் பிடித்தனர்

நீலக் கடலைப் போலவே
நிமிர்ந்து வானும் கிடந்தது
ஓலம் இட்ட வண்ணமே
உயரப் பருந்தும் பறந்தது

சுட்டி மீன்கள் கூட்டமாய்
துள்ளி சுழித்துச் செல்வதை
வட்டம் அடித்த பருந்துமே
வானில் பறந்து கண்டது

வில்லை விட்ட அம்புபோல்
விரைந்து கடலைத் தொட்டது
அள்ளிக் கௌவிச் சென்றது
அலகால் கொத்தித் தின்றது.

*ச.அருளானந்தம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலும் உயிரும்

கப்பல் ஒன்று கடலிலே
காற்றைக் கிழித்துப் போகுது
உப்புக் காற்று ஊதியே
உறுமிக் கொண்டு வீசுது

அலை உருண்டு திரளுது
ஆடிக் கரையில் மோதுது
அலை கிழித்துக் கப்பலும்
நுரை கிளப்பிப் போகுது

கடல் அடியில் மீனினம்
கப்பல் உள்ளே மனிதனும்
நடத்தும் காட்சி நாடகம்
நினைத்துச் சுப்பர் சிரிக்கிறார்

கடல் அடியில் மனிதனும்
கப்பல் உள்ளே மீனையும்
எடுத்து வைத்தால் வாழ்க்கையும்
எல்லாம் ஆடிப் போகுமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலும் தொழிலும்

மேற்கு வானில் சூரியன்
மெல்லச் சென்று மறைகிறான்
கீற்று நிலா கிழக்கிலே
கிளம்பி மெல்ல வருகிறான்

கடும் இருளும் சூழுது
காற்றும் சிலிர்த்து வீசுது
சுடும் வெயிலும் போனது
சுகம் உடலைத் தழுவுது

அலை புரண்டு அடிக்குது
அமைதிக் கடல் குதிக்குது
வலை சுமந்து தோணிகள்
மீன் பிடிக்கப் போகுது

கரையில் குளிராய் இருக்குமாம்
கடலில் சுகமாய் இருக்குமாம்
தெரிந்து வைத்த மனிதரும்
இரவில் தொழிலை செய்கிறார்.

*ச.அருளானந்தம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலும் நீரும்

நீலக் கடல் பரந்து கிடக்குது
நெளிந்து அலை புரண்டு அடிக்குது
மேள தாள ஒலியும் கிளம்புது
மாலை போன்று நுரையும் படியுது

பள்ளம் மேடு மறைந்து கிடக்குது
பார்க்க எங்கும் சமமாய் தெரியுது
உள்ளே உயிர் கோடி வாழுது
உண்டு வாழ்ந்து உவகை கொள்ளுது

கொள்ளை அழகு மீன்கள் கூடுது
கோடி வகை நண்டும் ஓடுது
மெல்ல அசைந்து பாசி வளருது
மீனுக்கு அவை தீனும் ஆகுது

தெப்பம் கட்டி மனிதன் மிதக்கிறான்
தேடிப் புகுந்து செல்வம் தேடுகிறான்
உப்பு நீரைக் கடலும் கொண்டதேன்
உவக்கும் தண்ணீர் நிலமும் கொண்டதேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலும் கரையும்

காற்று எங்கோ ஒழித்தது
கடலும் அமைதி கொண்டது
கீற்றுப் பிறையும் தெரிந்தது
கீறாய் மின்னல் பாய்ந்தது

வானில் மேகம் திரண்டது
வந்து இருளாய் புரண்டது
கூனல் நிலா மறைந்தது
கூவிக் காற்றும் மீண்டது

கிள்ளி விட்ட பிள்ளை போல்
துள்ளிக் கடலும் குதித்தது
அள்ளி வீசி அலைகளை
அடித்துக் கரையை கரைத்தது

இடிந்து கரையும் போனது
எல்லை மீறித் தேய்ந்தது
வடிவாய் பரந்த கரைதனை
வாரி விழுங்கிக் கொண்டது.

*ச.அருளானந்தம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலும் உப்பும்

கடற் கரையில் சிறுவர்கள்
கலத்தில் நீரை அள்ளினர்
அடுப்பில் தீயை மூட்டினர்
அதிலே கலத்தை வைத்தனர்

அடுப்பின் தீயின் வெப்பத்தால்
அசைந்து நீரும் கொதித்தது
அடுத்து மூடி அசைந்தது
அருமை பாடம் புரிந்தது

கொதிக்கக் கொதிக்க நீருமே
குறைந்து கொண்டு போனது
அதிக வெப்பம் கண்டதால்
ஆவி ஆகிப் பறந்தது

கலத்தை எடுத்துப் பார்த்தனர்
கலத்துள் உப்பைக் கண்டனர்
குலுங்கிக் கூத்து ஆடினர்
கற்ற பாடம் புரிந்தனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலும் காற்றும்

மெல்ல வானம் இருளுது
வெட்டி மின்னல் அடிக்குது
தள்ளிக் காற்று வீசுது
தளம்பிக் கடலும் மூசுது

கடலைக் காற்று உலுப்புது
கரையில் அலையை விரட்டுது
வெடித்து இரைந்து அலைகளும்
வீறு கொண்டு அடிக்குது

கொள்ளை அழகுக் கடற்கரை
குலைந்து சிறிதாய்ப் போனது
அள்ளி மணலைச் சேர்த்தது
அடித்துக் கொண்டு சென்றது

காற்று மெல்லத் தணிந்தது
கடலும் அமைதி கொண்டது
நேற்றுப் பரந்த கடற்கரை
நொடிப் பொழுதில் மறைந்ததே.

*ச.அருளானந்தம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலும் தரையும்

கடலும் பொங்கி எழுந்தது
கரை இடித்து வழிந்தது
இடம் பெயர்ந்து பள்ளமாய்
இருந்த நிலத்தில் புகுந்தது

ஊழிக் காலம் ஆனதும்
ஊர்ந்து ஊரை ஆழ்த்தவே
ஆழி பெருக்கை அனுப்புது
ஆய்ந்து வற்றாய் மீளுது

நாடு பிடிக்கும் ஆசையில்
நகரும் படைகள் போலவே
தேடி நிலத்தில் புகுந்துமே
ஏரி கழிகள் சேர்க்குது

உப்பு நீரும் புகுந்ததால்
உவர் கரச்சை ஆனது
உப்பும் விளைந்து பூத்தது
ஊரும் அள்ளிக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலும் செயலும்

கடலில் அலையும் புரண்டது - பின்
கரையை ஒதுங்கி அடித்தது
தடவிக் கரையைப் பார்த்தது - அதன்
தன்மை உணர்ந்து கொண்டது.

பெருக்கும் வற்றும் வந்தது - கடல்
பொங்கி ஆடிக் குதித்தது
அரித்து அரித்துக் கரைத்தது - அலை
அடித்து எழுந்து உதைத்தது.

உதைத்த தளத்தில் நிமிர்ந்தது - பாறை
உயர நின்று தடுத்தது
சிதைக்கும் அலையும் எழுந்தது - மடிந்து
சுருண்டு அடிமேல் அடித்தது.

அலையின் அடியின் வேகத்தால் - பாறை
அதிர்ந்து ஆடிச் சிதைந்தது.
குலைந்த பாறைச் சிதறலை - அலை
கூட்டிக் கரைத்துச் சென்றது.

*ச.அருளானந்தம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலும் சிறுவரும்

காய்ந்த பனையின் குருத்துகள்
கத்தி ஈர்க்கு எருக்கலை
காய்ந்த தடி சேர்த்தனர்
கடலை சிறுவர் அடைந்தனர்

பனையின் குருத்தை நறுக்கினர்
பதமாய் அதனை விரித்தனர்
நனைத்து ஈர்க்கு முனையினை
நான்கு கீறாய் பிளந்தனர்.

பிளந்த ஈர்க்கு முனையினை
பொருத்தி சூகை செய்தனர்
அளவாய் எருக்கங் குழலிலே
அதனை மாட்டிப் பிடித்தனர்

கடலின் காற்று வீசவே
கையில் சூகை சுழன்றது
படித்த பாடம் காற்றாடி
பதிந்து கொள்ள ஆடினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலும் காவிரியும்

காவிரி ஆறு கடலில் சேர்ந்தது
கரையில் பூக்கள் ஆடி விரிந்தது
கோவலன் மாதவி கூடி வந்தனர்
கூவி அலை கூத்து அடித்தது.

இந்திர விழா இனிது முடிந்தது
இறுதி ஆடல் கடலில் இருந்தது
வந்த மாந்தர் கூட்டம் திரிந்தது
வளைந்து வளைந்து மண்ணில் நடந்தது

புன்னை பூக்கள் பூத்துக் குலுங்கின
பூத்துத் தாழை மணம் பரப்பின
பண்ணும் பதமும் சேர்ந்து கொண்டது
பாடல் யாழில் குந்திக் கொண்டது.

கோவலன் பாட்டு மயக்கம் தந்தது
மாதவி பாட்டு மயக்கம் கலைத்தது
கோவலன் விரைந்து எழுந்து போயினான்
கொன்று சிலம்பு கதையும் ஆனது.

*ச.அருளானந்தம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந் நூலாசிரியர்........................................................

இந்நூலாசிரியர் திரு. ச. அருளானந்தம் அவர்கள் ஒரு அற்புதக் கவிஞர். சிறார்களின் உள்ளத்தில் நல்ல கருத்துக்களை விதைத்து, அவர்களை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும், சிந்திக்கும் ஆற்றல் உள்ளவர்களாகவும் ஆக்குவதற்கு பாடுபடுபவர். தெருவெங்கும் பள்ளிகள் கட்டுவோம் என்பதற்கேற்பப் பள்ளிகள் பல திறக்கப்பட பாடுபட்டவர்.

எந்தப் பாடத்தையும் எந்த வகுப்பிற்கும் இலகுவாகக் கற்பிக்கும் ஆற்றல் வாய்ந்தவர். உயர்தர வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ், புவியியல் பாடங்களைக் கற்பித்துச் சிறந்த பெறுபேற்றைக் கண்டவர். புவியியலில் பல பயிற்சி நூல்களை எழுதியுள்ளார். வவுனியா மாவட்டத்தில் (ஜீ.ஏ.கியு) முதற்கலைத் தேர்வு வெளிவாரி வகுப்புக்களைத் தொடக்கி தமிழ், புவியியல் பாடங்களைக் கற்பித்து பல பட்டதாரிகள் உருவாக உழைத்தவர்.

கவிதை பாடுவதிலும், கதைகள், கட்டுரைகள், நாடகங்கள் எழுதுவதிலும் வல்லவர். ஆரம்பக் கல்வியில் நாட்டங் கொண்டு, பல நூல்களை எழுதியுள்ளார். 'கடலும் காவிரியும்' எனும் இந்நூல் சிறுவர்களது சிந்தைக்கு விருந்தாகும். இவைபோன்ற பல நூல்களை இவர் எழுதி வெளியிட வாழ்த்துகிறேன்.

**எஸ். கனகசபை**
பிரதேச கல்விப்பணிப்பாளர்
பிரதேச கல்வித்திணைக்களம்
குச்சவெளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org